# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

### பிரிவு 6 (2014 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 11)

**விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல், சரியான விடைகளை எழுதுதுல்)**

1. விலிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? 73
2. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 46
3. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 27
4. விவிலியத்தின் முதல் நூலும் கடைசி நூலும் யாவை? தொடக்க நூல், திருவெளிப்பாடு
5. திருவிவிலியத்தில் இரண்டாவது நூல் எது? விடுதலைப்பயணம்.
6. திருவிவிலியத்தின் மூன்றாவது நூல் எது? லேவியர்.
7. கடவுளின் படைப்பில் தலைசிறந்தது எது? மனிதன்
8. ஆதிப்பெற்றோரின் பெயர் என்ன? ஆதாம், ஏவாள்
9. ஆதிப்பெற்றோரின் புதல்வர்கள் யாவர்? காயின், ஆபேல்
10. ஆபேலைக் கொன்றவர் யார்? காயின்
11. நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கு எத்தனை நாட்கள் நீடித்தது? 40 நாட்கள்
12. யாக்கோப்பின் பிள்ளைகளுள் கனவிற்கு விளக்கம் கொடுத்தவர் யார்? யோசேப்பு
13. இஸ்ராயேலரை எகிப்திலிருந்து மீட்டுவர இறைவன் யாரைத் தேர்ந்தெடுத்தார்? மோசேயை.
14. இஸ்ராயேல் மக்களை எகிப்திலிருந்து மீட்டு வர மோசேக்கு துணையாக இருந்தவர் யார்? ஆரோன்.
15. திருவிவிலியத்தில் நற்செய்தி நூல்கள் எவை? தூய மத்தேயு, தூய மாற்கு, தூய லூக்கா, தூய யோவான்.
16. எமது மீட்பின் அடையாளம் எது? திருச்சிலுவை.
17. இயேசு கைது செய்யப்பட்டு தலைமைக் குருவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரைப் பின்தொடர்ந்த திருத்தூதர் யார்? பேதுரு.
18. இயேசுவிற்கு பதிலாக விடுதலை செய்யப்பட்ட சிறைக் கைதி யார்? பரபாஸ்.
19. இயேசுவிற்கு சிலுவை மரணத் தீர்ப்பைத் தந்தது யார்? ஆளுநர் பிலாத்து.
20. இயேசு தனது சிலுவையை சுமந்து செல்ல உதவியவர் யார்? சீரேன் ஊர் சீமோன்.
21. இயேசுவை சிலுவையில் அறைந்த இடம் எது? மண்டையோடு எனுமிடத்தில்.
22. இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டவர்கள் யாவர்? இரு கள்வர்கள்.
23. யேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய முன்வந்தவர் யார்?அரிமத்தியா ஊர் யோசேப்பு.
24. பேதுருவின் சகோதரன் யார்? புனித அந்திரேயா.
25. யாக்கோபுவின் சகோதரன் யார்? புனித யோவான்.
26. 'நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்' எனக் கூறியது யார்? புனித பேதுரு.
27. நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்' என்று கூறியது யார்? புனித தோமா
28. புதிய உடன்படிக்கையில் பாஸ்கா செம்மறி யார்? இயேசு கிறிஸ்து.
29. சென்ம பாவத்தை கழுவும் அருளடையாளம் எது? திருமுழுக்கு
30. பொதுக்குருத்துவத்தில் பங்கு பெறச்செய்யும் அருளடையாளம் எது? திருமுழுக்கு
31. திருமுழுக்கில் பயன்படும் பொருட்கள் எவை? தண்ணீர், மெழுகுதிரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை
32. திருமுழுக்கில் பயன்படும் வெண்ணிற ஆடையின் அர்த்தம் என்ன? தூய்மை
33. குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை? ஒப்பரவு, நோயிற்பூசுதல்
34. மனம் வருந்துவதற்கான அருளடையாளம் எது? ஒப்புரவு
35. கிறிஸ்தவர்களான நாம் வாக்குறுதிகளைக் கொடுக்கும் அருட்சாதனங்கள் எவை? திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், திருமணம், குருத்துவம்.
36. தூய ஆவியின் கொடைகள் எத்தனை? 7
37. தூய ஆவியின் கனிகள் எத்தனை? 9
38. 'நானே நல்ல ஆயன் ' இதில் நல்ல ஆயனாக கருதப்படுபவர் யார்? இயேசு
39. பேதுரு இயேசுவை 'தெரியாது' என்று எத்தனை தடவை மறுதலித்தார்? 3
40. நமது திருத்தந்தையின் பெயர் என்ன? திருத்தந்தை பதினான்காம் லியோ

## இடைவெளி நிரப்புக

1. «என் அன்பார்ந்த .... நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்» **மகன்** (லூக்கா 3:22)
2. «நீரே என் ... , நீரே என் கடவுள்» **ஆண்டவர்** (யோவான் 20:28)
3. «நீர் ... , வாழும் கடவுளின் மகன்» **மெசியா** (மத்தேயு 16:16)
4. “ அருள் மிகப்பெற்றவரே வாழ்க! ………… உம்மோடு இருக்கின்றார் ” - **ஆண்டவர்** (லூக் 1:26)
5. “ பெண்களுள் நீர் ஆசீர் பெற்றவர், உம் வயிற்றில் வளரும் ………. ஆசீ பெற்றதே” - **குழந்தையும்** (லூக் 1: 42)
6. “ நான் ………. கண்டேன் ” - **ஆண்டவரைக்** (யோவான் 20: 18)
7. “ ஆண்டவருக்கு ………. செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர் ” - **நன்றி** (திருப்பாடல் 118:1)
8. “ உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு ……… உண்டாகுக” - **அமைதி** (லூக்கா 2:13-14)
9. “ உன் தந்தையையும் உன் ……….. மதித்து நட. ” **- தாயையும்** (விடுதலைப் பயணம் 20:12)
10. «நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் ... அன்பு செலுத்துங்கள்» - **மற்றவரிடம்** (யோவான் 13: 34)

## பேச்சுப்போட்டி

## புனித அந்தோனியார்

போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் பிறந்த புனித அந்தோனியார், தம் இறுதி நாட்களை இத்தாலி நாட்டில் பதுவை நகரில் செலவழித்ததாலும் இவரது கல்லறை இங்கே இருப்பதாலும் இவர் பதுவை அந்தோனியார் என்று அழைக்கப்படுகிறார். பிரபு குலத்தில் தோன்றிய இவர் 15 வயதில் அகஸ்டினியன் சபைத்துறவியானார். கி.பி 1220ல் மொரொக்கோவில் கிறிஸ்துவுக்காக குருதி சிந்தி உயிர்துறந்த பிரான்சிஸ்கன் துறவிகளின் உடல்களை பார்த்த பிறகு தானும் இயேசுவுக்காக குருதி சிந்த தணியாத தாகம்கொண்டு பிரான்சிஸ்கன் துறவியானார். கடவுளின் திருவுளப்படி இவர் ஆழமான மறைநூல் அறிவு, நாவன்மை கொண்டு போதகப்பணி புரிந்து பாறை மனம் கொண்ட பாவிகள், ஞான வாழ்வில் அக்கறை காட்டாதவர்களை மனம்மாற்றினார். தன்னுடைய 36வது வயதில் இறையடி சேர்ந்த இவர் இறந்த மறு ஆண்டே புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். கி.பி 1946ல் திருத்தந்தை 12ம் பத்திநாதர் மறைவல்லுநர் என்ற பட்டமளித்து இவரைப் பெருமைப்படுத்தினார். இவர் வாழும் காலத்திலேயே பல அற்புதங்களைப் புரிந்த படியால் ‘‘கோடி அற்புதர்” என்று எல்லோராலும் அழைக்கப்படும் புனிதராக திகழ்கின்றார்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

மாமறை புகழும் மரியென்னும் மலரே
மாதரின் மாமணியே

அமலியாய் உதித்து அலகையை மிதித்து
அவனியைக் காத்த ஆரணங்கே
உருவிலா இறைவன் கருவினில் மலர
உறைவிடம் தந்த ஆலயமே

பழியினைச் சுமந்த உலகினில் பிறந்து
ஒளியினை ஏற்றிய அகல்விளக்கே
இருள்திரை அகற்றி அருள்வழி காட்டி
வானக வாழ்வை அளிப்பாயே